செ.வெ. எண் : 533 நாள் : 18.8.2007

<u>பொதுப்பணித்துறை</u>

# செய்தி வெளியீடு

சென்னை மாநகரில் வடகிழக்கு பருவ மழையின் போது ஏற்படக்கூடிய வெள்ளம் மற்றும் தண்ணீர் தேங்குவதால் ஏற்படும் பாதிப்புகளை தவிர்ப்பதற்கான முன்னெச்சரிக்கை பணிகளை செயல்படுத்துவது குறித்து, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்களும், தலைமைச் செயலாளர், அரசுச் செயலாளர்கள், காவல் துறைத் தலைவர், சென்னை மாநகர காவல் துறை ஆணையாளர் மற்றும் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுடன் தலைமைச் செயலகத்தில் 18.8.2007 அன்று ஆய்வு செய்தனர்.

சென்னை மாநகர வடிகால் வசதிகள் மற்றும் நீர்வழிப்பாதைகள் ஆகியவற்றினை நிரந்தரமாக மேம்படுத்தும் பணிகள் ரூபாய் 868 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளுவதற்கான விவரங்களைக் குறித்து விவாதிக்கப்பட்டது. வட கிழக்கு பருவ மழைக்கு சுமார் இரண்டு மாதமே உள்ள நிலையில், சென்னை பெருநகரில், வெள்ளம் மற்றும் நீர் தேங்கக் கூடிய பகுதிகளை பாதுகாப்பதற்காக உடனடியாக மேற்கொண்டு

முடிக்கப்பட வேண்டிய **12** அவசரப் பணிகளை, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஏற்கனவே ஒதுக்கியுள்ள ரூபாய் 4 கோடியினை பயன்படுத்தி அக்டோபர் முதல் வாரத்திற்குள் முடிக்கமாறு பொதுப்பணித்துறையினருக்கு உத்தரவிடப்பட்டது. சென்னை மாநகராட்சி மற்றும் சம்பந்தப்பட்ட துறைகள் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்காமல் வெள்ள நீர் வடிவதற்கான முன்னேற்பாடுகளை செய்யவும், மழைக்காலங்களில் பாதிக்கக்கூடிய இடங்களில் வசிக்கும் மக்களை பாதுகாப்பதற்கு தேவையான நடடிவக்கைகளை எடுத்து தயார் நிலையிலிருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது.

********

**வெளியீடு** : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை -9.